தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies | ISSN(o): 3049-0723
[Impact Factor: 9.47] Monthly, Peer-Reviewed, Refereed, Indexed Journal with IC Value : 86.87
**Volume - 1, Issue - 10, July - 2025**

DOIs: https://doi.org/10.63300/tm0110202501 --:-- Research

# The Role of Dalit Short Stories in the Development of Tamil Short Stories

**Dr. K. PERIASAMY,**
Assistant Professor in Tamil,
Goverment Arts College (Autonomous), Karur 639005

***Abstract:*** *Dalit writers serve as vital chroniclers of Dalit life, offering unvarnished portrayals of their experiences in a manner that is both realistic and authentic, eschewing artificial literary flourishes. Dalit short stories, in particular, are characterized by their stark and unflinching directness, confronting the harsh realities of existence faced by the marginalized. This inherent directness, coupled with a profound sense of self-respect and identity, transforms these narratives into powerful instruments of social commentary and advocacy. Throughout the history of Tamil literature, the utilization of literature as a vehicle for achieving specific goals and as a platform for social struggle has been recurrent. In this vein, Dalit short stories function as potent weapons in the fight for the rights, dignity, and liberation of the oppressed, giving voice to the voiceless and challenging the systemic injustices they endure. They represent a literary battleground where the fight for equality and social justice is waged through the power of storytelling.*

***Key Words:*** *Eru Thazhuvuthal, Sennel (Red Paddy), Pavai Nonbu, Thainiraadal, Pudhiyidu, Bogi, Kathir Eduthal (Harvesting).*

# தமிழ் சிறுகதை வளர்ச்சியில் தலித் சிறுகதைகளின் பங்கு

**முனைவர்.கு.பெரியசாமி,**
*உதவிப் பேராசிரியர் தமிழாய்வுத்துறை*
*அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி), கரூர் – 639005*

**Abstract:** *தலித்துகளின் வாழ்வியல் அனுபவத்தை எந்தவிதமான இலக்கிய அலங்காரமும் இல்லாமல் மிக இயல்பாகவும் எதார்த்தமாகவும் இயல்பான முறையில் பதிவு செய்பவர்கள் தலித் படைப்பாளிகள். வாழ்வின் எதார்த்தங்களை தலித் சிறுகதைகள் நேரடியாக பேசுகின்றன. இந்த நேரடி தன்மையும் சுய வழிபாட்டுத் தன்மையும் தலித்திய சிறுகதைகளில் உள்ளீடாக காணப்படுவதால் தலித்தியக் கதைகள் யாவும் கதாயுதங்களாகக் காட்சியளிக்கின்றன. இலக்கியங்களை இலக்கினை அடையச் செய்யும் கருவியாகவும் போர்க்களம் கொண்ட சாதனமாகவும் பயன்படுத்தும் நிலை தமிழ் இலக்கியத்தில் பல்வேறு காலங்களில் நிகழ்ந்துள்ளன. இதன்படி தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைக்காகவும் விடுதலைக்காகவும் போராடும் கருவியாக தலித் சிறுகதைகள் பயன்படுத்தப்படுகின்றன.*

***குறிப்பு சொற்கள்*** *: விஷம்- நஞ்சு, புத்துயிர் ஊக்கம், தாமரை பங்கஜம், குருதி இரத்தம்*

## முன்னுரை:

தலித்துகள் ஆதிக்க சமுதாயத்திற்காகத் தங்களை முழுமையாக அர்ப்பணித்து விடுகின்ற சூழலை ஆதிக்க சமூகத்தினர் கட்டமைத்துள்ளனர். உயர் சாதியினரை

தலித்துகள் எதிர்த்து கேட்டால் அதற்கு பதிலீடாக தலித்துகளின் உயிர்களைக் குடிக்கின்றனர். அந்த நிகழ்வுகள் தான் கீழ்வெண்மணி, மேலவளவு போன்ற இடங்களில் நடந்த சம்பவங்கள் தலித்துகளுக்கு நடந்த கொடுமைகளை எதிர்த்து தான் இன்றைய தலித் இலக்கியங்கள் வடிவம் கொள்கின்றன. ஆதிக்க சாதி வெறிக்கு சாவு மணி அடிக்க வேண்டும் என்ற எண்ணமும் இந்த நச்சு செடியினை வேரோடு பிடுங்கி எறிய வேண்டும் என்ற அவசரமும் பல்வேறு அடக்குமுறைகளுக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும் என்ற விழிப்புணர்வும் கிளர்ந்து எழுந்து வருவதை இன்றைய தலைப்பு சிறுகதைகள் வழியாக காண முடிகிறது. சிறுகதைகள் ஆதிக்க அதிகார சக்திகளின் சூழ்ச்சியையும் கொடுமைகளையும் ஆழமாக எதிர்த்து வருகின்றன இத்தகைய கலக வடிவமானது தலித்துகள் சமுதாயத்தில் முழுமையாக சுதந்திரம் பெறும் வரை நடந்தேறிக் கொண்டுதான் இருக்கும்.

தலித் வாழ்க்கையை - அடையாளத்தை வெளிப்படுத்தும் சிறுகதைகளை சோ. தர்மன், சிவகாமி, அபிமானி பழி, பா. இதயவேந்தன், பாமா, எ.எம். சாலன் உஞ்சைராசன் பாப்லோ அறிவுக்கோயில் முதலான தலித் படைப்பாளிகள் தொடர்ந்து படைத்து வருகின்றனர். பண்பாட்டில் நிலைகுலைந்து ஒதுக்கப்பட்டத் தலித் மக்களின் வாழ்க்கையை தலித் படைப்பாளிகள் சிறுகதை மொழியில் இருந்து வருகின்ற எதார்த்தவாதம் என்கிற இலக்கிய மரபில் வெளிப்படுத்துகின்றனர்.

“எந்த ஒரு இலக்கியப் படைப்பும் மனித சமூகத்தின் ஒடுக்கப்பட்ட பிரிவை சார்ந்த மக்களின் அவர்களது போராட்டங்களின் நாடித்துடிப்பை வார்த்தைகளில் வெளிப்படுத்த முனைகிறதோ அது ஒரு பரந்த அர்த்தத்தில் தலித் இலக்கியம் என அழைக்கப்படுவதற்கான தகுதியை பெறுகிறது”1 என்கிற கூற்று தலித் சிறுகதைகளுக்கு பொருத்தமுடையதாக அமைந்துள்ளது.

பொதுவாக தலித் சிறுகதை வளர்ச்சியை இரண்டு விதமாக நோக்கி விளங்கிக் கொள்ள முடிகிறது.

1) **தொடக்க கால தலிச் சிறுகதைகள்**
2) **தற்கால தலித் சிறுகதைகள்**

என அவற்றை பாகுபடுத்தி அறிய முடிகிறது. 1930களில் படைக்கப்பட்ட தலித் சிந்தனை கொண்ட கதைகள் தொடக்க கால தனிச் சிறுகதைகளாக காட்சியளிக்கின்றன. அம்பேத்கரின் நூற்றாண்டு விழாவிற்கு பின் தோற்றம் கண்ட தலித் சிறுகதைகளை தற்கால தனிச் சிறுகதைகள் என வரையறை செய்யப்படுகின்றன.

தொடக்க காலத் தலித் சிறுகதைகள்

கதை கூறும் முறைமை தமிழருக்கு புதியதில்லை. ஏதோ ஒரு வடிவத்தில் அன்றைய செவிலித்தாய் பாட்டி சொன்ன கதைகளாகத் தொடங்கிய கதை கூறும் மரபு இன்றைய சிறுகதைகள் வரை கால நெடுகிலும் வெவ்வேறு தன்மையில் வடிவத்தில் வெளிப்பட்டுள்ளது. இருப்பினும் தனித்த வடிவமாக உணர்ச்சியை நறுக்குத் தெரிந்தாற்போல் வெளிப்படுத்த உள்ளதாக அமைந்தது தற்கால சிறுகதை வடிவங்களே என விளங்க முடிகிறது.

கதை பற்றிய குறிப்பு தொல்காப்பியத்திலேயே காணப்படுகிறது. “பொருள் மரம் இல்லா பொய்ம் மொழி” எனக் கதையை குறிப்பிடுகிறார் தொல்காப்பியர். இத்தகைய

தொன்மையான கதை மரபில் தலித் மக்களின் வாழ்க்கை பதிவு செய்த கதைகள் தொடக்க காலத்தில் எண்ணிக்கையில் குறைந்தளவில் காணப்படுகின்றன.

1930களில் தமிழ் இலக்கிய மறுமலர்ச்சியின் வளர்ச்சியால் தலித் மக்களின் வாழ்க்கையும் சிறுகதைகளில் பதிவு செய்யத் துவங்கியுள்ளது. “கு.பா.ரா.வின் ‘பறச்செங்கான்’ நா.பிச்சமூர்த்தியின் ‘அடகு’ புதுமைப்பித்தனின் ‘துன்பக் கேணி’ ‘நாசக்காரக்கும்பல்’ ‘கடவுளின் பிரதிநிதி’ ‘புதிய நந்தன்’ போன்ற படைப்புகளைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்”2 இவை தவிர ராஜாஜியின் ‘அர்த்தநாரி’, ஜெயகாந்தனது ‘ஒரு பகல் நேர பாசஞ்சர் வண்டி’ என்கிற கதைகளும் அன்றைக்கு சாதி கடந்த மனிதநேயத்தைப் பதிவு செய்துள்ளன. இத்தகைய கதைகள் நசுக்கப்படும் தலித் மக்களின் வாழ்வையும் மொழியையும் படைப்புகளில் பதிவு செய்திருந்தாலும் தலித் படைப்பாளியாக யாரையும் இனம் காட்டவில்லை என்பது அக்கால சாதியின் ஆதிக்கத்தை எடுத்துக்காட்டுகின்றது.

**தற்காலத் தலித் சிறுகதைகள்**

நெடுங்காலமாய் நிலவும் தீண்டாமைக் கொடுமைகளுக்கு எதிராகவும் சமூக பொருளாதார சுரண்டலுக்கு ஆட்பட்ட மக்களின் விடிவுகோலாகவும் தலித் படைப்புகள் தோன்றின. புல படைப்பாளர்கள் தங்களின் வாழ்வு சித்திரங்களை சிதைக்காமல் உள்ளது உள்ளபடியே தம்மை சுற்றியுள்ள சமூக நிகழ்வுகளை படைப்புகளாக அமைத்து, எதிர்ப்பு கூறுகளையும் சிறுகதைகளாய், கவிதைகளாய், நாவல்களாய், கட்டுரைகளாய், நாடகங்களாக படைக்க முயற்சித்தனர். கல்வி, விஞ்ஞான வளர்ச்சி, வேலைவாய்ப்பு, பொருளாதார வசதி போன்ற நிலைகள் காலந்தோறும் சமூகத்தில் மிகப்பெரிய மாறுதல்களை நிகழ்த்தி வந்தாலும் சாதிய நிறுவனத்தின் கட்டமைப்பை, இருப்பை, படிநிலையை மட்டும் அவற்றால் மாற்ற முடியவில்லை.

“ஆதிக்க வர்க்கங்கள் சாதியை கடவுளின் உருவகமாக்கி சமயத்தில் புகுத்தி அதற்கு அமரத்துவம் என்கிற நிலையான இடம் தந்துவிட்டதே இதற்கு காரணமாக அமைகின்றன. இந்தியா போன்ற நாடுகளில் சமயமும் சாதியும் தண்டவாளத்தின் இரண்டு பகுதிகளாக இணைந்தே காணப்படுகின்றன. இதனால் சாதியத்தை எதிர்ப்பவர்கள் சமயத்தை எதிர்க்க வேண்டிய நிர்ப்பந்தம், சாதியத்துக்கு எதிரான போராட்டமும் அன்றாட தேவைகளும் எதிரான போராட்டமும் அவர்களுடைய உரிமை போராட்டங்களாக பார்க்கப்படாமல் சமயத்துக்கு எதிரான போராட்டங்களாக பண்பாட்டுக்கு எதிரான போராட்டமாக பார்க்கப்படுகிறது”3 என்ற இராசரத்தினம் கூற்று தலித் சிறுகதைகள் கலகப் பதிவுகள் என்று உணர்த்துகிறது. தலித் மக்களின் வாழ்க்கை நுகர்வு போராட்டத்திலேயே கட்டமைக்கப்படுகிறது. போராட்டமும் கலகமும் நிறைந்த தலித் மக்களின் வாழ்க்கை இன்றைய தலித் சிறுகதைகளில் பதிவாகியுள்ளன.

“தலித்துகளிடம் அச்ச உணர்வும் மீறல் உணர்வும் கலந்து இருப்பினும் மீறல் உணர்வுகளை முன்னிலைப்படுத்தி கலையாக்குதலே தேவையாகும்”4 என்ற கேசவனின் கூற்றுக்கேற்ப தலித் சிறுதைகள் யாவும் மீறல் உணர்வை முன்னிலைப்படுத்தியே அதிகமான கதைகள் படைக்கப்பட்டுள்ளன. ‘கிசும்புக்காரன்’, ‘ஒரு தாத்தாவும் எருமையும்’, ‘பணக்காரி’ ‘அரசாங்கப் பிணங்கள்’ ‘ஆதிக்கக் கொண்டாட்டம்’ ‘சிதறல்கள்’

'ஊர்சோறு' 'உதிரும் மானுடம்' 'மனிதம்' போன்ற தலித் சிறுகதைகள் மீறல் உணர்வினை வெளிப்படுத்துவதற்கான சான்றுகளாக அமைந்துள்ளன.

தலித்தியக் கதைகளில் மறைமுக எதிர்ப்புணர்வும் நேரடி எதிர்ப்புணர்வும் கலக செயல்பாட்டுடன் பதிவாகியுள்ளன. குறிப்பாக பண்ணை வேலை முறைகளில் ஏற்படும் சிக்கல்களை போக்க ஒரு குழந்தையின் கல்வியை பணயமாக்க கேட்கும் அசுரத்தனத்தினை பாமாவின் 'தாவணி' என்னும் சிறுகதையும், அபிமானியின் 'பாழ்' சிறுகதையும் எதிர்ப்பு உணர்வினை மறைமுகமாக பதிவு செய்துள்ளனர். மேலும் 'அண்ணாச்சி' 'ஒரு தாத்தாவும் எருமையும்' 'அந்தக்காலம்' 'கிசும்புக்காரன்' 'கொண்டாட்டம்' போன்ற பாமாவின் கதைகளும், 'தேர்' எனும் அபிமானியின் சிறுகதையும் சா.கந்தசாமியின் 'டன்டணக்கு…எனக்கு….டனக்கு' எனும் சிறுகதையும் நேரடி எதிர்ப்புணர்வினை வெளிப்படுத்தும் தன்மையில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**தலித் சிறுகதைகளின் உள்ளடக்கம்**

"தலித் சிறுகதைகளின் உள்ளடக்கம் பொதுவான சமூக நிகழ்வுகளைக் கொண்டதாக அமைக்கப்படாமல் இருப்பதை காண முடிகிறது. காலம் காலமாக அடக்கி ஒடுக்கப்பட்ட சமுதாயத்தின் விளிம்பிற்குத் தள்ளப்பட்டு சிதைக்கப்பட்ட அடித்தட்டு மக்களின் வாழ்க்கை பிரதிபலிப்பாக அவர்களின் ஆசைகளையும், ஏக்கங்களையும், எதிர்ப்புகளையும், சாதனைகளையும், ஆழமான உணர்வுகளையும் சுமந்து வரும்"5 என்று தலித் இலக்கியத்தில் உள்ளடக்கம் வரையறை செய்யப்பட்டுள்ளன. தலித் இலக்கியத்தின் உள்ளடக்க வரையறையை சார்ந்து தலித் சிறுகதைகளின் உள்ளடக்கம் அமைந்து வருகின்றன என்பதை தலித் சிறுகதைகளின் வழி காண முடிகிறது. தலித் சிறுகதைகளைவாசிக்கும் ஒரு தலித்தின் உள்ளத்தில் சாதிவெறிக்கு சாவு மணி அடிக்க வேண்டும் என்ற எண்ணமும் இந்த நச்சு செடியை வேரோடு பிடுங்கி எறிய வேண்டும் என்ற வேகமும் பல்வேறு அடக்குமுறைகளுக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும் என்னும் விழிப்புணர்வும் கிளர்ந்து எழும் தன்மையில் கட்டமைக்கப்பட்டுள்ளது.

தலித் கதைகளில் மையப் பொருளாக தீண்டாமையின் கோரமுகம் தலித் பெண்களின் வாழ்க்கை தலித் சிறுவர்களின் கல்வி, இயற்கையோடு பின்னிப்பிணைந்த தலித்துகளின் உறவு விளிப்பு நிலை, மக்களின் மனிதாபிமானம், எதிர்க்குரல் கொடுத்து தொலைந்து விட்ட தம் அடையாளத்தை தேடும் தன்மை ஆகியவை இடம் பெற்றுள்ளன. தலித் மக்களின் கவலைகள், துன்பங்கள், அன்றாட வாழ்க்கையில் அவர்கள் அனுபவிக்கும் இன்னல்கள் மட்டும் இல்லாது அவர்களின் வீரமும் தீரமும் ஈரமும் அழுத்தமாக பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஒடுக்கப்பட்ட ஒரு சமூகம் வீறுகொண்டு எழும்போது அதைப் பொறுக்க இயலாத ஆதிக்க ஆவண சக்திகளின் சூழ்ச்சியும் ஆழமாக தலித் கதைகளில் இடம்பெறுகின்றன. தலித் இலக்கியம் என்பது "புதிய அனுபவங்கள், புத்துணர்வூட்டும் சொல்லாடல்கள், புது பாத்திரப் படைப்புகளைக் கொண்ட கதாநாயகர்கள், பொதுவானதிலிருந்து வேறுபடுகின்ற மாற்று பார்வை, துன்பம், கலகம் ஆகிய புத்துயிர்க் கலவைகள் தலித் இலக்கியங்களில் இருந்து வெளி வந்திருக்கின்றன"6 என்று சரண்குமார் லிம்பாலே கூறுவது தலித் இலக்கியத்தின் மையத்தினை விளக்குகிறது.

இன்றைய தலித் சிறுகதைகள் யாவும் சரண்குமார் லிம்பாலேயின் கருத்தைத் தாங்கியதாக வடிவமைக்கப்பட்டுள்ளன. பல்லாயிரம் ஆண்டுகளாக பணிந்து கிடக்கின்ற அநீதியானச் சமூகப் படிநிலையானது ஒரே நாளில் மாறிவிடாது. அது முற்றிலும் அழித்து ஒழிக்கப்பட ஆண்டுகள் பலவாகும். அதுவரையிலும் இந்த ஏற்ற தாழ்வான படிநிலை அமைப்புக்கு எதிரான கலகக் குரல் தொடர்ந்து ஒலித்துக்கொண்டே இருக்கும் என்பதை தலித் சிறுகதைகள் மூலம் உணர முடிகிறது.

**தலித் சிறுகதையும் இதழ்களும்**

இலக்கியம் படைப்பாற்றலும் கலை உணர்வும் கொண்ட படைப்பாளர் உள்ளத்தில் தோன்றுவதாக அமைகிறது. ஆனால் தலித் இலக்கியங்கள் சாதிய சமுதாயம் தரும் அனுபவங்கள், அவ்வனுபவங்கள் எழுப்பும் உணர்வும், அவற்றால் பெற்றத் தாக்கங்கள், சமூக விடுதலையின் மீது கொண்ட அக்கறை என்பன படைப்பாளர் உள்ளத்தால் தோன்றி எழுத்துருவம் பெற்று இலக்கியமாகிறது. இத்தகைய தலித் இலக்கியங்களை வெகுசன மக்களிடம் எடுத்துச் செல்லும் பணியினை இதழ்கள் செய்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக இந்தியா டுடே, புதிய பார்வை, அரங்கேற்றம், செம்மல,ர் தாமரை, தீக்கதிர், தினமணிக்கதிர், தமிழ் முரசு, தீராநதி, ஆனந்த விகடன் பணிக்குடம், தினகரன், சாளரம், குங்குமம், அணங்கு, புதுவிசை, அம்ருதா, கவிதாசரண், கணையாழி, புதிய கோடாங்கி, இலக்கியபீடம், சுபமங்களா போன்ற இதழ்கள் தலித் சிறுகதைகளை வெளியிட்டு தலித் இலக்கிய வளர்ச்சிக்கும் தலித் படைப்பாளர்களின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் உதவுகின்றன.

தலித் சமூகத்தினர் குனியக் குனிய குட்டி கொண்டு தான் இருப்பார்கள் ஆதிக்க அதிகார வர்க்கத்தினர். ஆகவே குனிந்து குனிந்து குட்டு வாங்கிய காலங்களை விடுத்து தலித்துகள் நிமிர்ந்து எழுதும் காலம் இது. கீழ்வெண்மணி, உத்தபுர தடுப்புச்சுவர், திண்ணியக் கொண்டமை, மேலவளவு, கொடியங்குளம், பாப்பாப்பட்டி, கீரப்பட்டி நாட்டார்மங்களம், கண்டதேவி போன்றவைகளின் தீண்டாமை வனமங்கள், இரட்டைக்குவளை, தனிச்சுடுகாடு போன்ற சமத்துவமின்மை, மேலும் பொதுமைகளில் ஒதுக்குதல் என்று அடக்கி ஒடுக்கப்பட்ட சமூகம் எழுச்சிக் கண்டு எதிர்த்து கலகம் செய்கிறது. மேலும் தனி மனிதனின் உரிமைகள் மறுக்கப்படுவதைக் கண்டும் தலித்துகள் எதிர்த்து போராடுகின்றனர் என்கிறது இன்றைய தலித் சிறுகதைகள்.

தலித் இலக்கியத்துக்கு பல்வேறு நிலைகளில் ஆதரவுகளும் எதிர்ப்புகளும் இன்றைய சூழலில் இருந்து வருவதை காணமுடிகிறது. தலித் இலக்கியத்தில் உள்ள புது அனுபவங்களும், மாறுபட்ட மொழிநடையும், புரட்சிகர கருத்துக் கலகமும், எதிர்த்துத் தாக்குகின்றப் போர்க்குணமும் ஏற்றத்தாழ்வை ஏற்க மறுக்கின்ற பிடிவாதமும், மனித மாண்புகளும் தான் காலத்தை வெல்லும் தன்மையை தீர்மானிக்கக் கூடும். ஒடுக்கப்படும் ஒட்டுமொத்த மக்களின் பொருளாதார, சமூக, அரசியல், பண்பாட்டுத் தளங்களில் ‘விடுதலை பெறுதல்’ என்பதை மையமாகக் கொண்டு தலித் இலக்கியங்கள் யாவும் செயல்படுகின்றன. அவ்வகையில் தலித் சிறுதைகளும் தனது பங்களிப்பினை செய்துள்ளன என்பதை அறிய முடிகிறது.

**முடிவுரை**

தலித் சிறுகதைகள் தொண்ணூறுக்குப் பிறகு புத்துயிர்ப் பெற்று வெளிவரத் தொடங்கியுள்ளன. தொடக்க காலத்தில் கதை மாந்தர்களை மட்டுமே சிறுகதைகளில் உள்ளடக்கமாக, ஒரு பகுதியாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளன. ஆனால் இன்றைய தலித் கதைகளில் கதைமாந்தர், கதைக்களம், படைப்பாளி என்ற அனைத்து தளங்களிலும் தலித்துகளின் வெளிப்பாடுகள் காணப்படுகின்றன. குறிப்பாக தலித் இலக்கிய சிந்தனை மரபானது தமிழ் இலக்கிய சிந்தனை மரபினை மாற்றி அமைத்துள்ளது. காலம் காலமாக கடைபிடித்து வந்துள்ள இலக்கிய மரபினை இன்றைய தலித் சிறுகதைகள் உருவ உள்ளடக்கத்திலும் மையப் பொருள்களிலும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன.

**சான்றெண் விளக்கம்**

1. சு.சண்முகசுந்தரம் (தொ.ஆ) தலித்தியம் ப.99
2. மேலது ப.61
3. இராசரத்தினம் தலித் சிறுகதைகளில் கலகப்பதிவுகள் (கட்டுரை) ப.112
4. கே.கேசவன் தலித் இலக்கியம் சில கட்டுரைகள் ப.112
5. பாமா கொண்டாட்டம் ப.3
6. சரண்குமார் லிம்பாலே முந்துநூல் ப.58

**References:**


1. Su. Shanmugasundaram (Editor), Dalithiyam, p. 99
2. Ibid, p. 61 (Note: "Ibid" means "in the same place" and refers to the previously cited work)
3. Irasarathinam, "Kalakapthivugal in Dalit Sirukathaikal" (essay), p. 112 (Translation: "Insurrectionary Records in Dalit Short Stories")
4. K. Kesavan, Dalit Ilakkiyam Sila Katturaikal, p. 112 (Translation: "Dalit Literature: Some Essays")
5. Bama, Kondattam, p. 3 (Translation: "Celebration")
6. Sarankumar Limbale, Munthunool, p. 58 (Translation: "Primary Text" or "Original Text")


**Copyright (c) Author**

**This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.**